ஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 08 2024 **SUNDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மகளிருக்கு எதிரான வன்முறைகளை தடுக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

2. அறிவியில் தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி துறைகளில் இந்தியா — அமெரிக்கா இடையே ஒத்துழைப்பு வலுப்பெற்றிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. லோக் ஜன்சக்தி ராம்விலாஸ் பிரிவு கட்சித் தலைவராக திரு. சிராக் பாஸ்வான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

4. இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் தாக்குதல் நடத்தியதை அடுத்து, அந்நாட்டில் இரண்டு நாட்களுக்கு அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் 12 பிரிவுகளில் 84 இந்திய வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர்.

>>>>><<<<<

நாட்டின் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவதில் பெண்களின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மஹாராஷ்ட்ரா மாநிலம், **Jalgeon**–ல் 11 லட்சம் புதிய லட்சாதிபதி மகளிர் தொழில் முனைவோருக்கு சான்றிதழ்களை வழங்கிப் பேசிய அவர், நாட்டின் அனைத்து துறைகளிலும் பெண்களை ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

மகளிரின் பாதுகாப்புக்கும், அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்வதற்கும் அரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகளிருக்கு எதிரான குற்றங்களை, குறிப்பாக வன்முறைகளை தடுக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பெண்கள் பாதுகாப்பு விஷயத்தில் அலட்சியப் போக்கை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பெண்களின் கண்ணியத்தையும், அவர்களின் வாழ்வையும் காக்கும் மிகப் பெரிய பொறுப்பு அரசுக்கு உள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியின்போது, 48 லட்சம் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டுக்கான சுழல் நிதியையும் பிரதமர் விடுவித்தார்.

மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனையும் பிரதமர் விடுவித்தார்.

இதன் மூலம், 25 லட்சத்து 80 ஆயிரம் உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், விண்வெளித் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய திட்டங்களால், இளைஞர்கள் புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று பயனடைந்து வருவதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாட்டின் முதலாவது தேசிய விண்வெளி தினம் கொண்டாடப்பட்டதை நினைவுகூர்ந்த பிரதமர், சந்திரயான்-3 வெற்றியின் அடையாளமாக இந்நாள் திகழ்வதாகவும் கூறினார்.

*(சவுண்ட் பைட் - மோடி (1) 32 செகண்ட்ஸ்)*

இந்த ஆண்டு தமது சுதந்திரதின உரையில் ஒரு லட்சம் இளைஞர்கள், அரசியலில் பங்கேற்க வேண்டும் என்று தாம் விடுத்த அழைப்பு, இளைய சமுதாயத்தினரிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாகவும், அதிக அளவில் அரசியலுக்கு வர அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அடுத்த சில நாட்களில் பல்வேறு பண்டிகைகளை நாம் கொண்டாடவிருப்பதை குறிப்பிட்ட பிரதமர், மக்களுக்கு தமது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டார்.

*(சவுண்ட் பைட் - மோடி (2) – 20 செகண்ட்ஸ்)*

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் இரவு 8 மணிக்கு சென்னை அகில இந்திய வானொலியில் மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

லோக் ஜன்சக்தி ராம்விலாஸ் பிரிவு கட்சித் தலைவராக திரு. சிராக் பாஸ்வான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ராஞ்சியில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அவர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அவர் அக்கட்சியின் தலைவராக இருப்பார்.

இந்த கூட்டத்தில் ஹரியானா, ஜம்மு காஷ்மீர், ஜார்க்கண்ட் மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக திரு. சிராக் பாஸ்வான் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

>>>>><<<<<

அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் பசுமை எரிசக்தி துறைகளில், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்திய அமெரிக்க சிவில் அணுசக்தி வர்த்தக ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், செமிகண்டக்டர், மருந்து பொருட்கள், பசுமை எரிசக்தி ஆகிய துறைகளில்

உலகளாவிய வர்த்தகத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கரிமப் பொருட்களால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையில் பசுமை எரிசக்தி இயக்கம் இந்தியாவில் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கனரக தொழிற்சாலைகள், போக்குவரத்து மற்றும் மின்உற்பத்தியில் அதிக அளவில் பசுமை ஹைட்ரஜன் பயன்பாட்டை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அறிவியில் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை இருநாடுகளும் இணைந்து, அதிக அளவில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

ககன்யான் விண்வெளித் திட்டத்தில் பங்கேற்ற இந்திய விண்வெளி வீரர், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இணைந்து செயல்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையிலான விண்வெளி ஒத்துழைப்புக்கு இது முக்கிய மைல்கல்லாக விளங்குகிறது என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

மத்திய அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் வரவேற்றுள்ளார்.

பீகார் மாநிலம், பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய ஓய்வூதிய திட்டத்திற்கு மத்திய அரசு அளித்து வந்த 14 சதவீத பங்குத்தொகை, ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தில் 18 புள்ளி ஐந்து சதவீதமாக உயர்ந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

மாநில அரசுகளும் இந்த திட்டத்தை பின்பற்ற வேண்டும் என்று திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த கோகுலாஷ்டமி நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர் உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் போதனைகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் பின்பற்றி மகிழ்ச்சி காணும் நன்னாள் கோகுலாஷ்டமி என்று குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீமத் பகவத் கீதை, மனித சமுதாயத்திற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளதாக திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள செய்தியில், தெய்வீக அன்பு, ஞானம், நீதி ஆகியவற்றை உள்ளடக்கிய கிருஷ்ண ஜெயந்தி, ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த நன்னாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றி, ஈகை பண்பு ஆகியவற்றை மனிதகுலத்திற்கு எடுத்துரைக்கும் நாளாக இந்நாள் அமைந்துள்ளது என்றும் குடியரசு துணைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இஸ்ரேல் மீது, ஹிஸ்புல்லா அமைப்பினர் இன்று காலை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது, மேற்காசிய நாடுகளில் பதற்றமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், தங்களது அமைப்பின் முக்கிய தலைவர் **Fouad Shukur** பெய்ரூட்டில் கடந்த மாதம் 30ஆம் தேதி கொல்லப்பட்டதற்கு பதில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், லெபானானிலிருந்து 100 ஜெட் விமானங்கள் மூலம் ஹிஸ்புல்லா அமைப்பு, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தது தங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்றும், எனவே அவர்கள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ இதுகுறித்து தெரிவிக்கையில், மத்திய இஸ்ரேல் பகுதியை குறிவைத்து தாக்குதல் நடத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட ஏவுகணைகள், வெடிகுண்டுகள் மற்றும் 40 ஏவுதளங்கள் அழிக்கப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார்.

லெபனானிலிருந்து ஹிஸ்புல்லா அமைப்பினரின் திட்டமிட்ட தாக்குதலை அடுத்து, இஸ்ரேலில் இன்று காலை தொடங்கி, 48 மணிநேரத்திற்கு அவசரநிலை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் 20க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் இன்று புறப்பட்டுச் சென்றனர்.

டேபிள் டென்னிஸ் வீராங்கனை பவீனா பட்டேல், சோனால்பென் பட்டேல், பேட்மிண்டன் வீரர்கள் மனோஜ் சர்கார், மனிஷா ராம்தாஸ்,

கிருஷ்ணா நாகர், தடகள வீரர்கள் சச்சின் கிளாரி, சாக்ஷி கஸானா உள்ளிட்டோர் இன்று புறப்பட்டுச் சென்றனர்.

வரும் புதன்கிழமை தொடங்கவிருக்கும் பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியாவிலிருந்து இதுவரை இல்லாத அளவில் 84 விளையாட்டு வீரர்கள், 12 விளையாட்டு பிரிவுகளின் கீழ் பங்கேற்கவுள்ளனர்.